# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள்
## (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)

***2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் அவர்களால்*
*2022, ஒகத்து மாதம் 31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, ஒகத்து மாதம் 12 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***147 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *12.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2:** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம் எனக்குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துகின்றது என்பதுடன், 4 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 3:** இவ்வாசகம் 4 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 4:** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மீள இடுகின்றதென்பதுடன் மாற்றீடு செய்யப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழான தத்துவங்களை உரித்தாக்கப்பட்டதாக இருக்கவேண்டிய அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவுக்கான ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 5:** இவ்வாசகம் முதன்மைச்சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரின் சட்டப்பயனானது, "வலு மற்றும் சக்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சர்" என்னும் சொல்லை மாற்றுவதாகும்.

**வாசகம் 6:** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது "அமைச்சர்" என்னும் சொல்லமைப்பின் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதும் 4 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தத்தின் பயனாக, "சக்தி வழங்கள் குழு" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்குவதுமாகும்.

**வாசகம் 7:** இவ்வாசகம் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன் பயன்படுத்தப்பட்ட தத்துவங்கள் மற்றும் செயல்களின் செல்லுபடியாந்தன்மைக்கு ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 8:** இவ்வாசகம் நிலைமாறுகால ஏற்பாடுகளை வழங்குகின்றதுடன், பிரிவின் சட்டப்பயனானது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையை முதன்மைச் சட்டவாக்கத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட உரிமங்களுக்கு விசாலிப்பதாகும்.

## பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)

*ச.வ.- ஓ. 11/2022*

### 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற் கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்*

**1.** (1) இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் கூறப்படலாம்.

(2) இப்பிரிவு தவிர்ந்த சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக் கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்*

**2.** (இதனகத்துப்பின்னர், "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் விரிவுப் பெயர், "சக்தி வழங்கல் குழுவுக்குக்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவுக்குக்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*"சக்தி வழங்கல் குழுவானது" "குழு" என குறிப்பீடு செய்தல்*

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு எழுத்திலான சட்டத்திலும், முதன்மைச் சட்டவாக்கத்துடன் தொடர்பில், "சக்தி வழங்கல் குழு" என்னும் குறிப்பீடு ஒவ்வொன்றும், "3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழு" என்னும் குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தினால் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட, ஆக்கப்பட்ட, தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில், தொடர்பாடலில், படிவத்தில்

அல்லது வேறு ஆவணத்தில், ''சக்தி வழங்கல் குழு'' என்னும் குறிப்பீடு ஒவ்வொன்றும், ''3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழு'' என்னும் குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகிறது:-

*''இச்சட்டத்தின் கீழ் தத்துவகள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்று வதற்கு குழுவொன்றை நியமித்தல்*

3. (1) இப்பிரிவின் அடுத்துவரும் ஏற்பாடுகளுக் கமைய, இதனகத்துப் பின்னர் தரப்படும் தத்துவங் கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிக்கவும், புரியவும் மற்றும் நிறைவேற்றவுமென (இதனகத்துப் பின்னர், ''குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) குழுவானது பின்வருவோரைக் கொண்டி ருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினர்கள்-

(i) பெற்றோலியம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செய லாளர், அவர் குழுவின் தவிசாளராதல் வேண்டும்;

(ii) திறைசேரியின் செயலாளர் அல்லது திறைசேரியின் பணிப் பாளர் தலைமையதிபதி பதவி வரிசைக்குக் குறையாத அவரது நியமத்தர்;

(ஆ) அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அல்லது முதன்மைப் பணிப்பாளர்;

(இ) பெற்றோலியத் தொழில் சட்டம் ஆகிய துறைகளில் திறமையை எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் ஒருவர், அமைச்சரவைக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியைவிட்டு விலகினாலன்றி அல்லது எடுத்துக்காட்டப்படும் காரணங்களுக்காக அத்தகைய உறுப்பினர் அமைச்சரவையால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, நியமனத் திகதியிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(4) குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன், குழுவானது, குழுவின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான நடவடிக்கை முறையையும் ஒழுங்குபடுத்தலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவிலுள்ள "வலு மற்றும் சக்தி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சர்", என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவினைத் திருத்துதல்

(1) "இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "அமைச்சர்" என்பது, அரசிலயமைப்புச் சட்டத்தின் 44 அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் இச்சட்டம் தொடர்பான விடயம் மற்றும் பணிகள் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள் படும்."; அத்துடன்

(2) "சக்தி வலு குழு" என்னும் சொல்லமைப்பின் வரை விலக்கணத்தை நீக்குவதன்மூலமும்.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தினால் சக்தி வழங்கல் குழு மீது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பின்பற்றி இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்னர் அதனால் பிரயோகிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் அல்லது செய்யப்பட்ட செயல், எல்லா நோக்கங் களுக்காகவும் செல்லுபடியான முறையில் பிரயோகிக்கப்பட்டுள்ள தாகவும் செய்யப்பட்டுள்ளதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் செய்யப்பட்ட செயல்களின் செல்லுபடியான தன்மை

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழ் செல்லு படியான முறையில் வழங்கப்பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற திகதிக்கு அப்பால் நீடிக்கின்றதொரு காலப்பகுதிக்கு வலுவில் தொடர்ந்திருப்பதாக அதன்கண் குறிப்பிடப்பட்டதுமான ஒவ்வொரு உரிமமும், அவ்வாறு குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்கு வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உரிமம் பெற்ற ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அல்லது இச்சட்டத்தின் கீழும் அதன்கீழ் ஆக்கப்பட்ட வேறேதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் கீழும் சட்டமுறையாக விதிக்கப்படக்கூடிய வேறேதேனும் நியதிகளினதும் நிபந்தனை களினதும் ஏற்பாடுகளுக்கும் அமைந்தவராதலும் வேண்டும்.

நிலைபெயர் கால ஏற்பாடுகள்

**9**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*